தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

புதன்கிழமை, 1974 மார்ச் 27

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத்தலைவர் (**திரு. சி. பி. சிற்றரசு**) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Students' Union in Colleges

* 221 *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the purpose for which the Students' Union in colleges is being organised;

(*b*) whether it is a fact a number of colleges were affected this year following clashes among students as a sequel to the elections to the Students' Union; and

(*c*) the proposals with the Government to improve their functioning and to avert such clashes in future?

கல்லூரிகளிலுள்ள மாணவர் சங்கங்கள்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கல்லூரிகளிலுள்ள மாணவர் சங்கம் எந்த நோக்கத்துடன் செயல் பட்டு வருகிறது ?

(இ) மாணவர் சங்கத் தேர்தல்களின் விளைவாக மாணவர்களிடையே மோதல்கள் ஏற்பட்ட காரணத்தால் பல கல்லூரிகள் பாதிக்கப்பட்டது உண்மையா ?

(உ) மாணவர் சங்கங்களின் செயல்முறையைச் சீர்ப்படுத்தி எதிர் காலத்தில் அத்தகைய மோதல்கள் நிகழ்வதைத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) பாடப் பயிற்சி தவிர, மற்ற பொதுப் பயிற்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கக் கல்லூரிகளில் மன்றங்கள் அமைக்கப்படுகின்றன.

(இ) சிற்சில கல்லூரிகளில் மாணவர்களிடை மோதல்கள் ஏற்பட்டது உண்மையே.

(உ) மாணவர்கள் பொறுப்புணர்வுடன் செயலாற்றி, இது போன்ற சச்சரவுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பார்களென்றும், அதற்குச் சாதகமான சூழ் நிலையைக் கல்லூரி நிர்வாகிகளும், ஆசிரியர்களும் பெற்றோர்களும், உருவாக்க உதவுவார்களென்றும், அரசு நம்புகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, கல்லூரிகளில் மாண வர்கள் யூனியன் என்று ஒன்று ஏற்படுத்த ஏதாவது அவசியம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கல்லூரிப் பாடங்களைத் தவிர பிற பொதுத் தன்மைகளிலும் மாணவர்கள் ஈடுபாடு கொள்ள வேண்டும், பயிற்சி பெற வேண்டும் என்பதற்காகத் தான் இப்படிப்பட்ட கல்லூரிப் பேரவைகளும், பாடங்களுக்கு ஏற்ற தனி மன்றங்களும் அமைக்கப் படுகின்றன. இந்த அவைகளை, மன்றங்களை அமைப்பதில் பல்வேறு வகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. நேரடித் தேர்வு, மறைமுகத் தேர்வு என்றும் இன்னும் சில கல்லூரிகளில் வகுப்புக்கு வகுப்பு தேர்வு நடைபெற்று, இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லோரும் சேர்ந்து பேரவையை அமைக்கின்றார் கள். இப்படி நடத்தப்படும் இடங்களில் சங்கடங்கள் வருவதில்லை. கல்லூரியில் இருக்கின்ற அவ்வளவு மாணவர்களும் சேர்ந்து 2 பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், அதில் அரசியல் மாச்சரியங்கள் ஏற்படுகின்றன. வெளியே மற்ற தேர்தல்களில் நடைபெறுவதுபோன்று, இந்தக் கல்லூரி மன்றங்கள் தேர்விலும் பெரும் செலவு செய்யப்படுகிறது. அதன் காரணமாக சில பல கல்லூரிகளில் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றன. சில கல்லூரிகளில் மன்றங்கள் வேண்டாம் என்று வைத்தாலும், மாணவர்கள் அதைப் பெறு வதற்கு வேலை நிறுத்தங்கள் செய்து பெற்று விடுகின்றார்கள். ஆகவே ஆசிரி யர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அவ்வளவு பேரும் ஈடுபட்டு, அந்த அடிப் படையில் சமரச முடிவைக் காணவேண்டியிருக்கின்றோம்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Government do something to prevent politics getting into these Students' Unions because very often these elections are fought at the party level?

1974 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், மற்றவர்களும் எடுத்துச் சொன்னாலும் கூட, அது நடைமுறைப்படுவதில்லை. ஆங்காங்கு இருக்கின்ற மாணவர்களில் சிலர் கட்சி ரீதியாகப் பிரிந்து விடுகிருர்கள். அப்படிப் பிரிந்துவிடுவதால் போட்டா போட்டிகள் ஏற்படுகின்றன. கட்சி ரீதியில் பிரியக் கூடாது என்பதுதான் பொதுவாக எல்லோருக்கும் இருக்கின்ற கருத்து.

THIRU G. VASANTHA PAI : Sir, may I bring to the notice of the Hon. Minister that there is a strong feeling that political parties are also subsidising those elections?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படியும் சொல்லப்படுகின்றது. அதை எப்படித் தவிர்ப்பது என்பதுதான் தெரியவில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, யூனியன் இல்லாத கல்லூரிகள் எவ்வளவு இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒரு சில இருக்கக்கூடும். அவற்றின் புள்ளிவிவரங்கள் என்னிடம் இல்லை.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, கல்லூரிப் பேரவைகள் ஜனநாயக முறையில் ஏற்படவேண்டும் என்பது அரசின் நோக்கமாக இருந்தாலும், அந்த முறையில் மாணவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட சந்தர்ப்பம் இல்லாமல், கல்லூரி முதல்வரே நியமிக்கின்ற நிலைமை இருப்பது அரசிற்குத் தெரியுமா? அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சில இடங்களிலே முதல்வர்களே நியமிக்கலாம் என்ற அளவுக்கு இருந்தாலும், அதை மாணவர்கள் எதிர்க்கின்ருர்கள். அப்படித்தான் பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரியில் நடைபெற்றது. மாணவர்களே தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற கிளர்ச்சியின் அடிப்படையில் சில நாட்கள் வேலைநிறுத்தம் ஏற்பட்டு, முடிவில் மாணவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டிவந்தது. போட்டிகள் ஏற்படும் நிலையில், இரண்டு கட்சிகளாகப் பிரிந்து மாச்சரியமும், கலவரமும் ஏற்படுகின்றன. ஆகவே கூடுமான வரையில் கலவரம் ஏற்படாமலிருக்க, இன்டைரக்டு எலெக்ஷன் என்ற வகையில், வகுப்புக்கு வகுப்பு தேர்வு நடைபெற்று, இவர்கள் சேர்ந்து பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்ற இடங்களில் அதிகமான மாச்சரியங்கள் இல்லாமல் இருக்கின்றது. ஆகவே அந்த முறையைக் கையாளுவது நல்லது என்ற யோசனைகூட ஆங்காங்கு கூறப்பட்டிருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, மாணவர்கள் யூனியன் தேர்தலில் எந்த முறையைக் கையாண்டாலும், சச்சரவுகள் இருந்துகொண்டிருக்கின்றன. சச்சரவுகள் ஏற்படாமலிருக்க ஒரு நல்ல முறையைத் தேர்ந்தெடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த மன்றங்களுக்குத் தேர்தல் முறை இல்லாமல், நியமிக்கலாம் என்றாலும், தகராறு வருகிறது. மன்றங்களே தேவையில்லை என்று வைத்தாலும், தகராறு வருகிறது. தேர்வு நடத்தலாம் என்றாலும், தகராறு வருகிறது. எல்லாக் கல்லூரிகளிலும் இப்படித் தகராறு ஏற்படுகிறது என்று குறிப்பிட முடியாது. 178 கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றில் மிகச் சில கல்லூரிகளிலே தான் மாச்சரியங்கள் வருகின்றன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, ஆண்கள் கல்லூரிகளில் மட்டும் தான் சச்சரவுகள் ஏற்பட்டிருக்கின்றனவா? அல்லது பெண்கள் கல்லூரிகளிலும் ஏற்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பெண்கள் கல்லூரிகளைப் பொறுத்த வரையிலே, இதுவரையில் சச்சரவுகள் ஏற்படவில்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, கல்லூரி யூனியன் தேர்தலைப் பொறுத்த வரையில், அரசியல் கட்சிகள் தலையீடு ஏற்படுவதால், சச்சரவுகள், சங்கடங்கள் வருகின்றன. அவ்வாறு அரசியல் கட்சிகளின் தலையீடு இல்லாமல் நடைபெற அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது உணர்வு பூர்வமாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்று. சட்ட திட்டத்தால் கொண்டுவர முடியாது. இதில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். சில இடங்களில் அரசியல் மாச்சரியங்கள் இருந்தாலும், வேறு சில இடங்களில் சாதிகளின் அடிப்படை அமைந்துவிடுகின்றது. இன்னும் சில இடங்களில் மாவட்ட வாரி என்ற அடிப்படையில் மாவட்ட வாரியாகப் பிரிந்து, தென் மாவட்டம், வட மாவட்டம் என்று பிரிந்து, சங்கடங்கள் ஏற்படுகின்றன. சில இடங்களில் ஆசிரியரைப் பொறுத்து, இரண்டு செட்டாகப் பிரிந்து மாணவர்களிடையே குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆகவே ஆங்காங்கு ஏற்படுகின்ற குழப்பங்களை ஆற அமரத் தீர்த்து, அதன் மூலம் சீரான நிலையை ஏற்படுத்த வேண்டும். சில இடங்களில் மாணவர்களின் பேச்சுத் திறமை, செயலாற்றும் திறமை இவற்றைப் பொறுத்து, அவர்களுக்கு

வாக்களிக்க வேண்டும் என்ற உணர்வு இருக்கின்றது. எல்லாக் கல்லூரிகளிலும் அமைதியான முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படு கிறது என்றாலும், சில இடங்களில் சச்சரவுகள் ஏற்பட்டுவிடுகின்றன.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, பெரும்பான்மையான மோதல் கள் எதன் காரணமாக நிகழ்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறுவார் களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பத்திரிகை களிலே வருகின்ற செய்திகளைப் பார்க்கின்றபோது, பெரும்பான்மையான மோதல்கள் கட்சி மாச்சரியங்கள் காரணமாகத் தான் ஏற்படுகின்றன என்று கொள்ள வேண்டும்.

Selection Grade Scales of pay.

* 222 Q.—THIRU S. MUTHUSWAMY (on behalf of T :)x§ G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that some graduate teachers, who have served for more than 20 years, have not received any benefit in their pay under the pay scales for Selection Grade fixed as per the latest order of the Government ; and

(b) if so, the action proposed to be taken by the Government ?

தேர்வுத்தர சம்பள விதங்கள்

திரு. செ. முத்துசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றியுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் சிலர் அரசு அண்மையில் பிறப்பித்த ஆணையையொட்டி தேர்வுத் தர ஆசிரியர்களுக்காக முடிவு செய்த சம்பள விதங்களின் கீழ் தங்கள் சம்பள விதத்தில் பயன் எதையும் பெறவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?